# ACHAMILLAI PGTRB ECONOMICS
# STUDY MATERIAL - 2018
# முக்கியக் கோட்பாடுகள்

## வட்டிக் கோட்பாடுகள்

1. **உற்பத்தித்திறன் கோட்பாடு ( productivity theory )**

   மூலதனம் உற்பத்தித் திறன் வாய்ந்தது ஆகவே மூலதனத்திற்க்கு வட்டி வழங்க வேண்டும்.

2. **துய்ப்புத் தவிர்புக் கோட்பாடு ( Abstinence Theory ) -நாஸாசீனியர்**

   மனிதன் தன் கையில் கிடைக்கும் பணத்தை அடுத்த வினாடியே செலவழித்து பயன் துய்ப்பது ஒவ்வொருவரின் இயற்க்கை குணம். அதனை உடனடியாகச் செலவழிக்காமல் சேமிக்கத் துண்டுவது வட்டி ஆகும் என சீனியர் கூறியுள்ளார்.

3. **காத்திருத்தல் கோட்பாடு ( waiting theory ) - மார்ஷல்**

   கையில் கிடைக்கும் பணத்தை உடனடியாக செலவழிக்காமல் காத்திருப்பதற்க்கு கொடுக்கப்படும் வெகுமதி வட்டி ஆகும்

4. **காலக் கழிவுக் கோட்பாடு ( Agio theory ) - போம் போகுவாக்**

   நிகழ்கால விருப்பங்களை புறக்கணித்துவிட்டு எதிர்கால விருப்பங்களில் ஆர்வமுள்ளவராக செய்வதற்க்கு மக்களுக்கு கொடுக்க வேண்டிய சன்மானம் வட்டியாகும்

5. **காலத் தேர்வு வட்டிக் கோட்பாடு(time Preference)-இர்விங் பிஷர்**

   மக்களின் நிகழ்கால விருப்பம் அதிகமிருந்தால் அதிகமாக செலவு செய்வர், இதனால் சேமிப்பும், மூலதனமும் குறையும். சேமிப்பும் மூலதனமும் பெருக நிகழ்கால விருப்பம் குறைவாக இருக்க வேண்டும் . இதற்க்கு தூண்டுகோலாக மக்களுக்கு சன்மானம் வழங்க



அச்சமில்லை 9786226622

வேண்டும். இச்சன்மானமே வட்டியாகும். ஆக கால தேர்வுக்கு கொடுக்கும் சன்மானமே வட்டி என்று பிஷர் கூறியுள்ளார்.

6. **தொன்மை வட்டிக் கோட்பாடு** ( classical theory )

மூலதனத்தின் தேவை மற்றும் அளிப்பை பொறுத்து வட்டி அமையும் என்று தொன்மை வாதிகள் கூறியுள்ளனர்

7. **கடன் நிதிக் கோட்பாடு** ( Loanable funds theory ) - **நட்விக்ஸல்**

கடன் நிதிக்கான தேவையும் கடன் நிதிக்கான அளிப்பும் சந்திக்கும் இடத்தில் வட்டி நிர்ணயிக்கப்படுகிறது.

8. **ரொக்க விருப்ப வட்டிக் கோட்பாடு**(Liquidity Preference Theory)-**கீன்ஸ்**

மக்களிடம் கையிருப்பாக உள்ள ரொக்க பணத்தை சிறிது காலம் விட்டுக் கொடுப்பதர்க்காக, அவர்களுக்கு கொடுக்கப்படுவதே வட்டியாகும்

## இலாபக் கோட்பாடுகள்

1. **இலாப வார கோட்பாடு** ( Rent theory ) - **வாக்கர்**

நிலத்தின் தர வெறுப்பாட்டிர்க்கு ஏற்ப வாரம் கிடைப்பது போல், தொழில் முனைவோர்களின் திறமைக்கு ஏற்ப இலாபம் கிடைக்கும் என்பது வாக்கரின் கருத்தாகும்

இலாபம் திறமையின் வேறுபாட்டினால் உண்டாவதால் அதை திறமை உயர்வின் வாரம் எனலாம் என்பது வாக்கரின் கருத்தாகும்

2. **கூலிக் கோட்பாடு** ( Wage Theory ) - **டாசிக்**

தொழிலில் திறமை மிக்கவர் பெரும் கூலியே வாரம் உழைப்புக்கு ஊதியமாக கூலி வழங்குவது போல் தொழில் அமைப்புக்கு ஊதியமாக இலாபம் வழங்கப்படுகிறது.

3. **இயக்கநிலைக் கோட்பாடு** ( Dynamic theory of profit ) - **JB.கிளார்க்**

பொருளாதார அமைப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தொழில்முயல்வருக்கு இலாபம் கிடைக்கும் தொடர்ந்து மாறிக்கொண்டேயிருக்கும் பொருளாதாரத்தில் மட்டுமே இலாபம் பெற முடியும் என கிளார்க் கூறியுள்ளார்

4. **புத்தாக்கக் கோட்பாடு - சும்பிட்டர்**

புதுமைகளை கண்டுபிடித்து அவற்றை உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் கிடைக்கக் கூடியதே இலாபம் ஆகும்.

5. **ஆபத்து ஏற்புக் கோட்பாடு ( Risk bearing theory of profit )- ஹாலே**

ஆபத்துக்களை ஏற்க தொழில் முயல்வோர் பெறும் பரிசு இலாபமாகும்

6. **உறுதியின்மை தாங்கும் கோட்பாடு ( uncertainty bearning theory of profit ) நைட்**

காப்பீடு செய்துக் கொள்ள முடியாத ஆபத்துக்களையும், உறுதியின்மையையும் தாங்குவதற்க்காகத் தொழில் முயல்வோர் பெறும் வெகுமானமே இலாபம் ஆகும்

## வாணிப சூழல் கோட்பாடு

1. **சூரியப் புள்ளிக் கோட்பாடு ( Sun spot Theory ) - ஜெவான்ஸ்**

வாணிபச் சுழர்ச்சி தோன்றுவதற்க்கு தட்பவெட்ப நிலைகளில் ஏற்படும் மாறுதல்களே காரணம்.

2. **உளவியல் கோட்பாடு - பிகு**

வாணிபச் சூழலுக்கு வணிகர்களின் மனதில் தோன்றும் நம்பிக்கை மற்றும் அவநம்பிக்கைத்தான் காரணம்

3. **புத்தாக்கக் கோட்பாடு - சும்பிட்டர்**

புதிய கண்டுப்பிடிப்புகளின் காரணமாக வாணிபச் சூழல் ஏற்படுகின்றது.



அச்சமில்லை 9786226622

4. **பணவழிக் கோட்பாடு ( Monetary Theoy ) - ஹாட்ரே**

பண அளவிலும், கடன் அளவிலும் ஏற்படும் மாற்றங்களே வாணிப சூழலை தோற்றுவிக்கின்றன.

5. **மிகு முதலீட்டுக் கோட்பாடு ( over investment ) - வான்ஹேயக்**

சேமிப்பை விட அதிகமாக முதலீடு செய்வதாலேயே வாணிப சூழல் ஏற்படுகிறது

6. **மிகு சேமிப்புக் கோட்பாடு ( over saving ) - ஹாப்சன்**

வாணிப சுழர்ச்சிக்கு சமுதாயத்தின் மிகை சேமிப்பு மற்றும் குறை நுகர்வே காரணம்

7. **சிலந்தி வலைக் கோட்பாடு( cob web theory ) - சூல்ஸ்**

வேளாண்மை பொருட்களின் உற்பத்தி அளவில் ஏற்படுகின்ற சூழல்களை இக்கோட்பாடு விளக்குகிறது.

8. **ஹிக்ஸின் வாணிப சூழல் கோட்பாடு**

ஹிக்ஸ் பெருக்கி மற்றும் முடுக்கி கருத்தை இணைத்து இக்கோட்பாடு விளக்கப்பட்டுள்ளது. வாணிப சூழலின் இரு பக்கங்களாக பெருக்கியும் முடுக்கியும் அமைந்துள்ளது.

9. **கீன்சின் கோட்பாடு**

மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத் திறனில் ஏற்படும் மாறுதல்களே வாணிப சூழல் ஏற்பட்ட காரணமாகும்

## பணவீக்கக் கோட்பாடுகள்

1. **பண அளவுக் கோட்பாடு**

பணத்தின் அளவு அதிகரிப்பதால் பணவீக்கம் ஏற்படுவது பேரா.மில்டன், பிரைடுமேன், ஹாட்ரே ஆகியோர் இதன் அடிப்படையில் பணவீக்கத்தை விளக்கியுள்ளனர்.

அச்சமில்லை 9786226622

2. **மிகை தேவைக் கோட்பாடு - விக்ஸெல், கேனன்,கீன்ஸ்**

அளிப்பைக் காட்டிலும் பண்டத்தை வாங்குவதர்க்கான தேவை அதிகமாக இருப்பதால் ஏற்படுவதே பணவீக்கம் ஆகும்

3. **தேவை இழுப்பு பணவீக்கம்**

போதுமான அளிப்பைக் காட்டிலும் போதுமான பணத்தேவை அதிகரிக்கும் போது தேவை விலைமட்டத்தை மேலே இழுக்கும் இதுவே தேவை இழுப்பு பணவீக்கம்

4. **செலவு உந்து பணவீக்கம்**

பணவீக்கம் ஏற்படுவதற்க்கு காரணம் உற்பத்திக் காரணிகளுக்கு செய்யப்படும் செலவு அதிகரிப்பதே ஆகும். - பணவீக்கம் செலவாள் உந்தப்படுகிறது.

000

**சுரண்டல் கோட்பாடு ( Drain Theory ) - நவரோஜி**

இங்கிலாந்து இந்தியாவின் செல்வத்தையெல்லாம் சுரண்டிக் கொண்டுபோய்விட்டதாக கருதினார். உடம்பிலிருந்து உதிரத்தை உறிஞ்சுவது போல் இந்தியாவின் செல்வத்தில் பெரும்பகுதி பிரிட்டிஷ்காரர்களால் உறிஞ்சப்பட்டது

**பாரீட்டோ புது நலப் பொருளாதாரம்**

- சமநோக்குக் கோட்பாட்டைப் பயன்படுத்தி தனி மனிதனின் நலத்தையும், சுமுதாய நலத்தையும் பாரீட்டோ ஆராய்ந்தார்.
- உச்சநிலை சமூக நலன் - எந்த மாற்றமும் ஒருவருக்கு நலக் குறைவிர்க்குக் காரணமாய் இருக்கக் கூடாது.

**ஹிக்ஸின் ஈடுகட்டு தத்துவம்** - நன்மை பெறுபவர்கள் நட்டம் அடைந்தவர்களுக்கு ஈட்டுதொகையை கொடுத்து அவர்களுக்கும் நிகர நன்மை கிடைக்கும்படி செய்தால் சமுதாயத்தில் பொருளாதார நலன் அதிகரிக்கும் ....................**தொடரும்**



9786226622
அச்சமில்லை